சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண் :OS:96/2019

2024ம் ஆண்டு மார்ச் திங்கள் 27ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ராஜேந்திரன் (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

27.03.2024

1) எனது தாயார் இறப்பதற்கு முன்பு மறைக்குளத்தில் தனிகுடித்தனமாக இருந்தார். நானும், 3வாதியும் திருமணத்திற்கு பின் தனிக்குடித்தனமாக இருந்து வருகிறோம். 4ம் வாதி திருமணமாகாமல் என் அம்மாவுடன் குடியிருந்து வந்தார். என் அம்மா விவசாயம் செய்து வந்தார். என் அம்மா இறக்கும்போது 75 வயது. எத்தனை வயது வரை விவசாயம் பார்த்து வந்தார் என்றால் இறக்கும் வரை விவசாயம் செய்து வந்தார். 5ஏக்கர் வானம் பார்த்த பூமி உள்ளது. வருடத்திற்கு சுமாராக 1லட்சம் வரை வருமானம் வரும். என் அம்மாவிற்கு அந்த வருமானத்தை தவிர வேறு வருமானம் கிடையாது என்றால் ஆடு வளர்த்தார். பிரதிவாதி இந்திராவும் எனது அம்மாவும் அடமானம் பத்திரம் ஏற்படுத்தி கொண்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நானும் இருந்தேன்.

2) வா.சா.ஆ1 அடமானபத்திரத்திற்கு ஆதரவாக தாவா சொத்து பிரதிவாதி

என்பதற்கு காட்ட ஆதரவு ஆவணம் எதுவும் ஒப்படைத்தாரா என்றால் இல்லை. தாவா சொத்து பிரதிவாதிக்கு தமிழ்நாடு ஆதிதிராடவிட வீட்டு வசதி வாரியத்திலிருந்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தாட்கோவிலிருந்து கொடுக்கப்படும் சொத்தினை பெறும் பயனாளி அதனை விற்கவோ அடமானம் வைக்கவோ கூடாது என்பது எனக்கு தெரியாது. தாட்கோ நிறுவனத்திற்கு பிரதிவாதி கடன் தொகை முழுவதையும் திருப்பி செலுத்திவிட்டாரா இல்லையா என்பது எனக்கு தெரியாது. வா.சா.ஆ1 ஏற்படுத்தப்பட்டபோது தாவா சொத்திற்கான வில்லங்கசான்று எடுத்து பார்த்தோமா என்றால் இல்லை. வா.சா.ஆ1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது என் தந்தை உயிருடன் இருந்தார். என் அப்பா வா.சா.ஆ1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது உடன்இருக்கவில்லை. என் தந்தை தான் உடனிருந்து பிரதிவாதியிடம் வறட்சி நிராவண தொகை வாங்கி தருவதாக கூறி அழைத்து சென்று மோசடியாக வா.சா.ஆ1 ஆவணத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல.

3) நான் சொல்லுவதுபோல் பிரதிவாதி வா.சா.ஆ1 ஆவணத்தின் கண்ட கடன் தொகை எதையும் என் அம்மாவிடம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் கணவர், நானும் பத்திரம் எழுதுபவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். 1ம் பிரதிவாதியிடம் சார்பதிவாளர் அலுலவலகத்தில் வைத்து கையெழுத்து வாங்கினோம். பத்திரம் எழுதும் இடத்திலும் கையெழுத்து வாங்கினோம். பத்திரம் எழுதியது யார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு படிக்க தெரியாது என்பதால் அவரை அழைத்து சென்று மோசடியாக வா.சா.ஆ1 ஆவணத்தை எழுதி வாங்கிவிட்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 ஆவணத்தில் கண்ட தொகையை கொடுக்கும் அளவிற்கு அந்த காலகட்டத்தில் வருமானம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 ஆவணத்தை 1ம் பிரதிவாதி தன்னிச்சியாக ஏற்படுத்தி கொடுக்கவி'லை

என்றும் அதில் கண்ட தொகையை 1ம் பிரதிவாதி வாங்கவில்லை என்றும் வறட்சி நிவாரணம் வாங்கி தருவதாக 1ம் பிரதிவாதியை அழைத்து சென்று வா.சா.ஆ1 ஆவணம்ஏற்படுத்திவிட்டோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து அடமானம் ஏற்படுத்தி கொடுக்க 1ம் பிரதிவாதிக்கு சட்டப்படி உரிமை இல்லை என்பதால் வா.சா.ஆ1 ஆவணம் சட்டப்படியான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

4) 1ம் பிரதிவாதியை ஏமாற்றி வா.சா.ஆ1 ஆவணத்தை ஏற்படுத்தியதால் தான் வில்லங்கசான்று எடுத்து பார்க்காமல் அவசரகோலத்தில் வா.சா.ஆ1 ஆவணத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. நாங்கள் கோரும் பரிகாரம் எங்களுக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.